# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்)

***(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் 2024, யூலை மாதம் 23 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

(2024, யூலை மாதம் 04 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ **276 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : இவ்வாசகம் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 345 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது-

(அ) ஏதேனும் தொடர்பாடல்மூலம் விளைவிக்கப்பட்ட பாலியல் தொல்லையொன்றுக்கு அப்பிரிவின் ஏற்புடைமையை நீடிப்பதாகும்;

(ஆ) சொற்களை அல்லது செய்கைகளைப் பயன்படுத்துவதன்மூலம் பாலியல் தொல்லை விளைவிக்கக்கூடிய செயற்பாடுகளின் தொடர்ச்சிக்கு வரைவிலக்கணங்கூறுவதாகும்; அத்துடன்

(இ) "தொடர்பாடல்" என்னும் சொல்லமைப்புக்கு வரைவிலக்கணங்கூறுவதாகும்.

ச.வ.-ஒ. 55/2022

**(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

19 ஆம் அத்தியாயத்தின் 345 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**2.** (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 345 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“பாலியல் தொல்லை கொடுத்தல்

345. (1) தாக்குதல்மூலம் அல்லது குற்றவியல் பலாத்காரத்தைப் பயன்படுத்துவதன்மூலம், அல்லது சொற்களை அல்லது செய்கைகளைப் பயன்படுத்துவதன்மூலம் அல்லது ஏதேனும் தொடர்பாடல்மூலம் வேறோர் ஆளுக்குப் பாலியல் தொந்தரவை அல்லது தொல்லையை விளைவிக்கும் எவரும் பாலியல் தொல்லைகொடுத்தல் என்ற தவறைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐந்தாண்டுகளுக்கு நீடிக்கக்கூடியவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனையினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இரண்டினாலும் தண்டிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் தவறானது எந்த ஆள் தொடர்பில் புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றிலான நட்டஈட்டை அத்தகைய ஆளுக்குச் செலுத்தும்படியும் அவருக்குக் கட்டளையிடப்படலாம்.

(2) பாலியல் தொல்லைகொடுத்தலாக அமைகின்றவையும் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவையுமான, "சொற்களை அல்லது செய்கைகளைப் பயன்படுத்துவதன்மூலம்" என்பது, பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:-

(அ) ஏதேனும் ஒலியை அல்லது சைகையைச் செய்தல்;

(ஆ) ஏதேனும் பொருளைக் காண்பித்தல்;

(இ) ஆடைகளையகற்றுதல் அல்லது ஆடைகளற்றநிலையிலிருப்பதற்கு அத்தகைய ஆளைக் கட்டாயப்படுத்துதல்;

(ஈ) உடல்சார் தொடர்பு மற்றும் வரவேற்கத்தகாத அத்துடன் வெளிப்படையான பாலியல் காதற்கோரிக்கைகளை உட்படுத்துகின்ற அணுகல்கள்;

(உ) பாலியல் அனுகூலங்களைக் கோருதல் அல்லது வேண்டுதல்;

(ஊ) அத்தகைய ஆளின் விருப்பத்துக்கெதிராக ஆபாசவிடயங்களைக் காண்பித்தல்;

(எ) பாலியல்ரீதியிலான பாங்கினவான குறிப்புரைகளைச் செய்தல்; அல்லது

(ஏ) அச்சத்தை அல்லது இடுக்கண்ணை விளைவிக்கும் உட்கருத்துடன் பாலுறுப்புக்களை வெளிக்காட்டுதல்.

(3) பாலியல் தொல்லை கொடுத்தலாக அமைகின்ற (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட, "தொடர்பாடல்" என்பது, இலத்திரனியல் வழிவகைகளினூடாக அல்லது

*இணையத்தளத்தினூடாகப் பாலியல்ரீதியில் வெளிப்படையான ஏதேனும் செய்தியை, குறிப்புரையை, உருவத்தை, ஒலிப்பதிவை அல்லது காணொளியை அனுப்புதல், விநியோகித்தல், பகிர்தல், தோற்றுவித்தல், பரப்புதல் அல்லது வெளியிடுதல் என்பவற்றை உள்ளடக்கும்.*

*(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒரு தாக்குதல் என்பது, 363 ஆம் பிரிவின்கீழ் கற்பழிப்பாக அல்லது 365ஆ என்னும் பிரிவின்கீழ் பாரதூரமான பாலியல் துர்ப்பிரயோகமாக அமையாத ஏதேனும் செயலையும் உள்ளடக்கலாம்.*

*விளக்கம் - "ஊறுகள்" என்பது, உளவியல் அல்லது மனக்கிலேசத்தையும் உள்ளடக்கும்.".*

***3.*** *இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*